**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 113/2023 PW.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சுகிதா | த–பெ | சரவணன் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 27/2024 | வட்டம்: | |
| தொழில்: | : | ICICI வங்கியில் உதவி மேலாளர் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.12.2024**

---

10.12.2024

**முதல் விசாரணை**

1) நான் கண்டனூர் ஐசிஐசிஐ வங்கியில் துணை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அழைப்பானை வந்தது. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ 1 காசோலை எங்கள் வங்கியிலிருந்து மல்லிகா என்பவருக்கு கொடுக்கப்பட்ட காசோலையாகும். என்னிடம் காட்டப்படும் மா.சா.ஆ 2 ரிட்டன் மெமோ எங்கள் வங்கியில் கொடுக்கப்பட்டது. மேற்படி மா.சா.ஆ 2 ஆவணத்தில் காசோலை தேதியான 28.03.2023 மல்லிகாவின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லையென்று திருப்பப்பட்டது. அழைப்பாணையில் 01.01.2022 முதல் 27.11.2024 வரையிலான மல்லிகாவின் வங்கி கணக்குரிய கணக்கு பட்டியலை தாக்கல் கேட்டிருந்தது. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். **அது மா.சா.ஆ 5 ஆகும்.**

2) மேற்படி மல்லிகாவின் KYC ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். அது 2022 வருடம் மல்லிகாவிடம் பெறப்பட்டதாகும். **மேற்படி KYC மா.சா.ஆ 6 ஆகும்.** மல்லிகா 2004-ம் வருடம் எங்கள் வங்கியில் கணக்கு தொடங்கியுள்ளார். 2004 முதல் தொடர்ச்சியாக மேற்படி கணக்கில் வரவு-செலவு செய்துள்ளார். மல்லிகா காசோலை மூலம் பணம் பரிவர்த்தனை செய்துள்ளார். 31.01.2022 காசோலை எண்.970552 மூலம் ரூ.14,000/- எடுத்துள்ளார். 20.05.2020 காசோலை எண்.27280 மூலம் ரூ.3,27,000/-ம், 20.05.2020 காசோலை எண்.27279 மூலம் ரூ.5,27,000/-ம், 23.10.2020 காசோலை எண்.27281

மூலம் ரூ.28,000/-ம் எடுத்துள்ளார். பின்னர் அதே தேதியில் கோவிந்த ராஜன் என்பவருக்கு காசோலை எண்.27282 மூலம் ரூ.5 லட்சம் செலுத்தியுள்ளார். இவ்வழக்கு காசோலை எண்.27283 ஆகும்.

## <u>குறுக்கு விசாரணை</u>

1) கண்டனூர் ஐசிஐசிஐ வங்கியில் நான் கடந்த ஒன்றேகால் வருடமாக பணிபுரிந்து வருகிறேன். 2004 கணக்கு தொடங்கப்பட்டபோது எதிரி கையொப்பம் செய்து கொடுத்த KYC ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த ம.சா.ஆ. 5 ஆவணத்தில் 2020 வரை வரவு செலவு நடந்துள்ளது என்றாலும் அதன் பின்னர் ஜீரோ பேலன்ஸ் இருந்தது என்றால் சரிதான். எதிரி சோழமண்டலம் பைனான்சில் கடன் பெற்று இருந்ததால் மாதம் ரூ. 14 ஆயிரத்து 700 தவணையாக 28.10.2020 பிடிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் வங்கி கணக்கில் பணம் இல்லாததால் ஒவ்வொரு தவணை பிடிக்கப்பட்டபோதும் ஜீரோ பேலன்ஸ் இருந்துள்ளது. 07.03.2022 ல் ரூ. 10 வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. 28.03.2023 ல் ரூ.100 வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னர் மேற்படி வங்கி கணக்கு செயல்படாமல் இருந்துள்ளது. மேற்படி வங்கி கணக்கின் வாடிக்கையாளர் பெயர் மல்லிகா க-பெ இராமசந்திரன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.ம.சா.ஆ.6 ஆவணம் 07.03.2022 ல் எதிரியிடம் மாதிரி கையொப்பம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) இவ்வழக்கு காசோலை எப்போது எங்கள் வங்கியில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் 28.03.2023, ம.சா.ஆ. 6 ஆவணத்தில் உள்ள கையொப்பத்திற்கும் வழக்கு காசோலையில் உள்ள கையொப்பத்திற்கும் வித்தியாசம் உள்ளதா என்றால் வித்தியாசம் இல்லை. இவ்வழக்கு காசோலையில் பின்பக்கம் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். காசோலையில் உள்ள கையொப்பத்திற்கும் ம.சா.ஆ.6 ஆவணத்தில் உள்ள கையொப்பத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றாலும், வங்கி ஊழியர் என்பதால் வங்கியை காப்பாற்றவேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு காசோலையில் உள்ள கையொப்பத்தை பரிசீலனை செய்து signature differs என்ற காரணம் கண்டு திருப்பாமல் போதிய பணமில்லை என்று திருப்பியுள்ளோம் என்றால் சரியல்ல. எதிரியின் கையொப்பம் சரிபார்க்கப்பட்டு

அப்ரூவல் ஆனதால்தான் அடுத்த கட்டத்ததிற்கு காசோலை நகர்த்தப்பட்டது. காசோலையை நான் திருப்பவில்லை அப்போது பணியில் இருந்த நபரால் திருப்பப்பட்டது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா , B.Sc., B.L., (Hon's)**
விரைவுநீதிபதி, காரைக்குடி.